**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

2024 ம் வருடம் ஆகஸ்டு திங்கள் 20 ம் நாள் செவ்வாய்கிழமை
**அ.வ.எண்.81/2014 இல் இ.ம.எண்.01/2021**

காளிதாய் ... மனுதாரர் / வாதி

/ எதிர் /

1) வெள்ளிங்கிரி கவுடர் (இறப்பு)
2) ஆறுச்சாமி கவுடர்
3) பாப்பாத்தி
4) தேவராஜ் ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

5) காளிமுத்து
6) மணி
7) சின்னதாய்
8) சின்னசாமி
9) ரங்கநாயகி ... எதிர்மனுதாரர்கள் / உத்தேச பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 08.08.2024 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.விஜயகுமார் அவர்கள் முன்னிலையாகியும், 5 மற்றும் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.இளங்கோ அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், 2 முதல் 4, 6, 7 மற்றும் 9 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இருதரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

**ஆணையுரை**

5 முதல் 9 எதிர்மனுதாரர்களை வழக்கில் தரப்பினர்களாக கட்சி சேர்க்க மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 886 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உரிய உத்தரவு பிறப்பிக்குமாறு காலவரையறை சட்டம் பிரிவு 5–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.1)** இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் பேரில் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் வாதியின் சகோதர, சகோதரிகள் ஆவர். 4ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் இறந்துபோன சகோதரி ராஜம்மாளின் ஒரே வாரிசு ஆவார். திருமணத்திற்கு பிறகு மனுதாரர் அவரது குடும்பத்துடன் வழக்குசொத்திலிருந்து தொலைவில் வசித்துவந்தார். அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டபிறகு மனுதாரருக்கும், பிரதிவாதிகளுக்கும் சுமூகமான உறவு இல்லை. அதனால், மனுதாரரின் சகோதரரான 1ம் எதிர்மனுதாரர் கடந்த 22.12.2017 தேதியன்று இறந்தது குறித்த சங்கதிகள் மனுதாரருக்கு 2019 செப்டம்பர் மாதம்தான் தெரியவந்தது. எதிர்மனுதாரர் மற்றும் அவர்களது வழக்கறிஞர்களிடம் கேட்டும் இறந்துபோன 1ம் எதிர்மனுதாரரின் வாரிசு பற்றிய விபரங்களை அவர்கள் மனுதாரருக்கு தெரிவிக்கவில்லை. தற்போதுதான் இறந்துபோன 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள் பற்றிய விபரம் மனுதாரருக்கு தெரியவந்தது.

**2.2)** 5 முதல் 9 எதிர்மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள் ஆவர். அவர்களை வழக்கில் கட்சிசேர்க்க உரிமையியல் நடைமுறைசட்டம் கட்டளை 22 விதி 4 மனுவினை கடந்த 22.03.2018 தேதிக்குள் தாக்கல் செய்திருக்க வேண்டும். அவ்வாறு குறிப்பிட்ட தேதிக்குள் மனுதாக்கல் செய்யாததால் இறந்துபோன 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு அபேட்டாகவிட்டது.

மேற்படி அபேட்மெண்டை ரத்துசெய்வதற்கு மனுதாரக்கல் செய்வதில் ஏற்பட்ட 886 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்ககோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **5 மற்றும் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில்,** மனுதாரர் கூறியுள்ள உறவுமுறை சரியாகும். 9ம் எதிர்மனுதாரர் ரங்கநாகியின் பெயர் தங்கமணி என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் கடந்த 22.12.2017 தேதியன்று 5 முதல 9 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார். மேலும், மனுதாரர் கட்டளை 22 விதி 4–ற்கான மனுவை கடந்த 22.03.2018 தேதியன்றும், அப்பேட்மெண்டை ரத்துசெய்யவதற்கான மனுவை கடந்த 21.05.2018 தேதியன்றும் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் அப்பேட்மெண்ட் உத்தரவை ரத்துசெய்வதற்கான கட்டளை 22 விதி 4 மனுவை 886 நாட்கள் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதாக தவறாக தெரிவித்துள்ளார். ஆனால், 895 நாட்கள் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளார். இதனடிப்படையிலேயே இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும்.

4) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

6) **பிரச்சினை** :

இருதரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு ஆகியவற்றை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், இறந்துபோன 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளான 5 முதல் 9 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க உரிய காலத்தில் மனுதாக்கல் செய்யாததால் ஏற்பட்ட அபேட்மெண்ட்டை ரத்துசெய்வதற்கு மனுதாக்கல்

செய்வதில் ஏற்பட்ட 886 நாட்கள் காலதாமத்தை மன்னித்து உரிய உத்தரவு பிறப்பிக்ககோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 5 மற்றும் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர் அப்பேட்மெண்ட் உத்தரவை ரத்துசெய்வதற்கான கட்டளை 22 விதி 4 மனுவை 886 நாட்கள் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதாக தவறாக தெரிவித்துள்ளார் என்றும், ஆனால், 895 நாட்கள் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளார் என்றும், இதனடிப்படையிலேயே இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் எதிர்வாதம் வைக்கப்பட்டது.

**7)** அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், 1ம் எதிர்மனுதாரர் கடந்த 22.12.2017 அன்று வழக்கு நிலுவையில் இருக்கும்போது காலமாகிவிட்டார். 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள் 5 முதல் 9 எதிர்மனுதாரர்கள் ஆவர். மேற்படி சங்கதிகளை 5 மற்றும் 8 எதிர்மனுதாரர்கள் அவர்களது எதிருரையிலும் ஒப்புக்கொண்டுள்ளனர். மேலும், மேற்படி மனுவை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்திற்காக இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கூறியுள்ளார்களே தவிர, 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள் இல்லை என்று மறுக்கவில்லை.

**8)** ஆகவே, 5 முதல் 9 எதிர்மனுதாரர்கள் வழக்கிற்கு அவசியதரப்பினர்கள் ஆவர். மேற்படி இறந்த 1ம் எதிர்மனுதாரரின் சட்டப்படியான வாரிசுகளான 5 முதல் 9 எதிர்மனுதாரர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்க 90 நாட்களுக்குள் மனுவினை தாக்கல் செய்திருக்க வேண்டும்.

**9)** மனுதாரர்கள் தரப்பில் இறந்த 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்க உரிய நேரத்தில் மனுவினை தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறப்பட்டுள்ள நிலையிலும், உபயதரப்பினர்களுக்கும் சமமான வாய்ப்பளித்து முழுமையான விசாரணைக்கு பின் பிறப்பிக்கப்படும்

தீர்ப்பே உபயதரப்பினர்களுக்கும் நன்மை பயக்கும் என்ற சட்டநியதியின் அடிப்படையிலும், அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இறந்த 1ம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுகளை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல் வழக்கை முடிவுசெய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனினும், உரியமனுவை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட நீண்ட காலதாமதத்தை மனுதாரர் செலவுதொகை செலுத்துவதன் மூலம் ஈடுகட்டவேண்டும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரர் இம்மனுவின் செலவுத்தொகையாக ரூ.3000/-ஐ 5 மற்றும் 8 எதிர்மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகள் வரும் 02.09.2024 தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தும்பட்சத்தில் இம்மனுவானது அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தானாகவே தள்ளுபடி செய்யப்பட்டதாக கருதப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க : 02.09.2024.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்ததை 2024ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 20ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

N BHARATHIRAJAN
Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2024.08.20 18:35:33 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

– இல்லை. –

N BHARATHIRAJAN
Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2024.08.20 18:35:41 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-----------------------------------

**அசல் ஆணையுரை**

அ.வ.எண்.81/2014

இல்

இ.ம.எண். 01/2021

நாள் : 20.08.2024

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-----------------------------------